# 20 பல்வகை எழுத்து வடிவங்கள்: குறிப்பாகப் பாரம்பரியமொழிக் கல்விக்குப் பொருத்தமான எழுத்துச் சூழல்கள்

**இலக்கு**

முன்னர் பரிந்துரைக்கப்பட்ட பெருவாரியான பரிந்துரைகள் தாய்மொழிக் கல்வி வகுப்பறையிலே இலகுவாக நடைமுறைப்படுத்தலாம். பின்வரும் எழுத்துப் பரிந்துரைகள் பாரம்பரியமொழி கற்பித்தலுடன் உயர்நிலையான சிக்கல்களை நெருங்கி நோக்குகின்றன. இதனால், அவை பிறந்த நாடு அல்லது இரு பண்பாடுகள் மற்றும் மொழிகள் இடையே வாழுதல் என்னும் கருப்பொருள்களுடன் மிக நெருங்கிய தொடர்புடையன, இது தங்கள் தாயக மொழியில் பாரம்பரியமொழி வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களின் வழக்கமான பட்டறிவாகும்.

## 1. விடுகதை எழுத்துருக்கள்

4 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

மாணவர்கள் ஓர் ஒப்படையை பெறுகிறார்கள், அதில் தனித்தனியாக தங்கள் பிறந்த நாட்டின் வரலாறு, பண்பாடு அல்லது புவியியல் ஆகியவற்றிலிருந்து ஒரு நிகழ்வினை, அந்நிகழ்வையோ, பெயரையோ அல்லது இடத்தையோ பெயரால் குறிப்பிடாமல் விவரிப்பர். பணியினை முதலில் வகுப்பு முழுவதும் வாயூடாக பயிற்சி செய்யவேண்டும். எழுத்துருக்கள் எழுதப்பட்டபின், அவை திரட்டப்பட்டு மாணவர்களிடையே பரிமாறப்படுகின்றன, அவர்கள் புதிர்களை விடுவிப்பர்.

## 2. அறிக்கைகள், சுவரொட்டிகள், எடுத்துரைப்புகள்

3 - 9 ஆந் தரம்

இப்பெரிய கருத்திட்டம் பல பாடங்களுக்கு மேல் நீளலாம். தம்முடைய பிறந்த நாட்டின் ஒரு பெயர்பெற்ற ஒருவரைப் பற்றிய ஓர் அறிக்கையை, ஒரு சுவரொட்டியை அல்லது ஓர் எடுத்துரைப்பினை மாணவர்கள் உண்டாக்குதற்குப் பணிக்கப்படுகின்றனர். பல்வேறுபட்ட எடுத்துரைப்பு முறைகள் பற்றி முதலில் வகுப்பில் கலந்துரையாடப்படும் (எ.கா. சுவரொட்டி அல்லது ஏற்புடைய பணித்தாளுடன் எடுத்துரைப்பு). கடினநிலை, உண்மையில், அகவைப் பொருத்தத்துடனானது. இரண்டு அல்லது மேற்பட்ட இரணைப் பாடங்கள் இக்கருத்திட்டத்துக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் (எடுத்துரைப்புகள் உட்பட). கருத்திட்டத்தினை நீண்ட விடுமுறைகளுக்கு முன்னரே அறிவித்தல் நல்ல எண்ணமாகும். அதனால் மாணவர்கள் முன்னேற்பாடு செய்யவும் பொருள்களைத் திரட்டவும் நேர வாய்ப்பு ஏற்படுகிறது.

## 3. பணித்தாள்கள், புனைகதையல்லா எழுத்துருக்கள், வினாவிடைகள் முதலியன

4 - 9 ஆந் தரம் | 45 மணித்துளிகள்

பாரம்பரியமொழி வகுப்புகளுக்கு பணித்தாள்கள், புனைகதையல்லா எழுத்துருக்கள், படங்கள், கணினி எடுத்துரைப்புகள் முதலியவற்றைப் ஆசிரியர் ஏற்படுத்துவதற்குப் பதிலாக மாணவர்களும் சிற்சில வேளைகளில் அதனைச் செய்யலாம். இவ்வாறு செய்வதால், அவர்கள் பெருந்தொகை பொருள்கள் பற்றி கற்கவும் விமர்சிக்கவும் முடியும். பணி எதனை விளைவிக்கின்றது என்பதை துல்லியமாக முன்கூட்டியே முடிவு செய்வது மிகவும் இன்றியமையாததாகும், எனினும் (எ.கா. ஒரு தலைப்பை முடித்துவிட ஒரு பணித்தாளையும் வினாவிடையையும் ஏற்படுத்தவும்).

## 4. நேர்காணல், கற்பனை நேர்காணல்கள்

5 - 9 ஆந் தரம்

மாணவர்கள் முன்னர் கலந்துரையாடப்பட்ட ஒரு தலைப்புத் தொடர்பாக நேர்காணல்களை நடத்தி, அதனை எழுத்தில் ஆவணப்படுத்தி வகுப்புக்கு எடுத்துரைக்கவேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளனர். செய்யக்கூடிய தலைப்புகளாக, பெற்றோர்கள் மற்றும் பேரன் பேர்த்திமார் தம்முடைய தாயகத்தில் தம் பிள்ளைப்பருவ நினைவுகள், தாயகத்தில் தன் அகவையுள்ள ஒருவரை ஓய்வு நேரம் அல்லது எதிர்காலம் பற்றிய கண்ணோட்டங்கள் பற்றி ஒரு நேர்காணல், புகலிட நாட்டு மக்களின் இனவுணர்வு, பிறநாட்டவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பு பற்றிய தலைப்புகளில் ஒரு நேர்காணல், என்பவை சேர்க்கக்கூடியவை. எவ்வாறு ஒரு நேர்காணலை நடத்தலாம் என்பது பற்றி மாணவர்களுடன் முன்கூட்டியே கலந்துரையாடுவதும் பயிற்சிப்பதும் இன்றியமையாதது: வினாக்களை வடிவமைப்பதும் கேட்டலும் (ஆம்/இல்லை வினாக்களன்றி, திறந்த/ஆய்வு வினாக்கள்: "...பற்றிச் சொல்லுங்கள்", மற்றும் நேர்காண்பவர் என்னும் முறையில் முடிந்தவரை மிகக் குறைந்த அளவு பேசுக. மேலும், மறுமொழிகளை எவ்வாறு ஆவணப்படுத்தவேண்டும் என்பதை விளக்குக, சொல்லுக்குச் சொல்லாக நகலாக்குவதை விட மிக வேண்டிய சொற்களைப்